Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 06/2019
Sessions prosecution
depositions of witness for — LW1 Examined as Pw1 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 3.43 pm – 4.00 pm |
| Name | : | திரு. Marappa |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18th day of July 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஒச அள்ளி சூளகிரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன வீரபத்திரன் எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 02/03/2018 ம் தேதி எனது சகோதரர் வீரபத்திரன் வினாயகா பஸ்ஸில் கிளினராக வேலைக்காக காலை 6.00 மணிக்கு சென்றார். நான் ஊரில் இருக்கும் போது எனது சகோதரருக்கு லிங்காபுரத்தில் விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் ஓசூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்கு சேர்த்திருப்பதாகவும் ரத்தினப்பா என்பவர் போன் மூலமாக தகவல்

சொன்னார். நான் மருத்துவ மனைக்கு வந்து பார்த்த போது எனது சகோதரருக்கு மூக்கு, காது,வாய் மற்றும் தலையில் அடிப்பட்டு இறந்து கிடந்தார். சம்பவத்திற்கு அடுத்த நாள் 03/03/2018 ம் தேதி பாகலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகார் மனு ஆகும். **அது அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**- பிரேத விசாரணை நடந்த போது நான் உடன் இருந்தேன். சம்பவம் குறித்து போலிசார் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்து போன வீரபத்திரன் எனது தம்பி என்றால் சரிதான். சாட்சிகள் முனியப்பா, சீனிவாசன், ரத்தினப்பா, சாந்தகுமார், மஞ்சுநாத், பாஸ்கர், சாக்கப்பன், சாதப்பா, திம்மப்பா ஆகியோர் எனது உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. விபத்து நடந்த இடம் எது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்து நடந்த இடத்தில் ABL Gate Compound மேற்கு பக்கம் உள்ளது என்றால் தெரியாது. எனது சகோதரருக்கு ட்ரைவிங் லைசன்ஸ் இருந்ததா என்றால் இல்லை. அவர் கிளினராக வேலை செய்கிறார். எனது சகோதரருக்கு மது பழககம் இருந்ததா என்றால் இல்லை. எனது தம்பிக்கு வாகனம் ஓட்ட தெரியாது என்றும் மது அருந்திவிட்டு சாட்சி பாஸ்கரின் வாகனத்தை எடுத்து ஓட்டியதல் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனது தம்பியின் தவறால் விபத்து நடந்தது என்றும் காப்பீடு பெறுவதற்காக புகார் கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC. 06/2019
Sessions prosecution
depositions of witness for LW2 Examined as Pw2 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 4.00pm – 4.05 pm |
| Name | : | திரு. முனியப்பா |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18th day of July 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஒச அள்ளி சூளகிரியில் குடியிருந்து வந்து வயது மூப்பின் வீட்டில் இருந்து வருகிறேன். எனது மகன் பெயர் வீரபத்திரன் சுமார் 6 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார். அவர் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. பிரேத பரிசோதனையின் போது நான் உடன் இருந்தேன். போலிசார் விசாரணை செய்தது குறித்து ஞாபகமில்லை.

குறுக்கு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 06/2019
Sessions prosecution
depositions of witness for — LW3 Examined as Pw3 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 4.03 pm - 4.08pm |
| Name | : | திரு. சீனிவாசன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18th day of July 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஒச அள்ளி சூளகிரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.2 எனது மாமா, அ.சா.1 எனது மச்சன் ஆவார். விபத்தில் இறந்து போன வீரபத்திரன் எனது மச்சன் ஆவார். கடந்த 02/03/2018 ம் தேதி நான் சூளகிரியில் இருந்த போது அ.சா.1 மாரப்பா போன் செய்து அவருடைய சகோதரருக்கு ஏற்பட்டு விட்டதாகவும் அரசு மருத்துவ மனையில் இருப்பதாக சொன்னார். நான் ஓசூர் அரசு மருத்துவ மனைக்கு வந்து பார்க்கும் போது முகம் எல்லாம் ரத்த காயம் ஏற்பட்டு இருந்தது. சம்பவம் குறித்து போலிசார்

விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இறந்து போன வீரபத்திரன் எனது உறவினர் என்றால் ஆமாம். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வீரபத்திரனின் தவறால் விபத்து ஏற்பட்டது என்றும் காப்பீடு பெறுவதற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC.06/2019
Sessions prosecution
depositions of witness for — LW4 Examined as Pw4 Chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 4.09 pm – 4.15pm |
| Name | : | திரு. சாந்தகுமார் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18th day of July 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஒச அள்ளி சூளகிரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3 ஆகியோர் எனது ஊர்காரர்கள். இறந்த வீரப்பத்திரன் எனது ஊர்கார் ஆவார். கடந்த 02/03/2018 ம் தேதி நான் ஊரில் இருந்த போது அ.சா.1 அவருடைய தம்பிக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாகவும் ஓசூர் அரசு மருத்துவ மனையில் இருப்பதாகவும் சொன்னார். நான் சென்று பார்த்த போது வீரபத்திரனுக்கு தலையின் பின் புறம், மூக்கு, காதில் காயம் ஏற்பட்டு இறந்து கிடந்தார். பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்தேன்.

போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இறந்து போன வீரபத்திரன், அவருடைய சகோதரர் மாரப்பா மற்றும் அவருடைய தந்தை முனியப்பா ஆகியோர் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வீரபத்திரனின் தவறால் விபத்து ஏற்பட்டது என்றும் காப்பீடு பெறுவதற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.